கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.338/2023 வா.சா.1 செந்தில்குமார்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 08.04.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் வண்டி தடத்தில் கழிவறை கட்டியதால் வண்டி தடத்தை மீண்டும் அமைத்து தர கோரி உள்ளேன். வழக்கு சொத்து விவரத்தில் கழிவறை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கழிவறை எங்கு அமைந்துள்ளது என்றால் என் பூமியை ஒட்டி தென் புறத்தில் உள்ளது. வழக்கு கழிவறை கட்டப்படும் முன்பே அங்கு இன்னொரு கழிவறை இருந்தது என்றால் சரியல்ல. அந்த இன்னொரு கழிவறை என் வண்டி தடத்திற்கு வெளியே அருகில் இருந்தது.

2) என் சொத்து புல எண். 321/12 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். என் சொத்து தென்புறத்தில் 47.2 மீட்டர் உள்ளது என்றால் சரிதான். என் சொத்தின் தென்புறத்தை ஒட்டி தான் க.ச.எண். 331 கிழமேல் பஞ்சாயத்து சாலை அமைந்துள்ளது என்றால் அது வீதி ஆகும் . வழக்கு கழிவறையின் அளவீடுகள் மற்றும் பரப்பளவு என்றால் கழிவறை , செப்டிக் டேங்க் , சோக் பிட் ஆகியவற்றை சேர்த்து தென்வடலில் 15 முதல் 20 அடியும் கிழமேல் சுமார் 60 அடியும் உள்ளது.

3) வழக்கு கழிவறைக்கு மேல் புறமும் கிழபுறமும் என் சொத்திற்கு செல்லும் அளவிற்கு இடம் உள்ளது என்றால் சரியல்ல. அப்பகுதியில் கிணறும் மரங்களும் இருப்பதால் இடம் இல்லை. பழைய கழிவறை எப்போது கட்டப்பட்டது என்றால் சுமார் 2002 வாக்கில் கட்டப்பட்டது. பழைய கழிவறை சேதம் அடைந்து விட்டதால் அதனை இடித்து விட்டு அதே இடத்தில் தான் வழக்கு கழிவறை கட்டப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு கழிவறை அதே இடத்தில்

கட்டப்படவில்லை. மேற்படி வீதியில் இருந்து என் சொத்திற்கு செல்லும் அளவிற்கு இடம் உள்ளதை நான் வழக்கிற்காக பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

4) நான் எதிர் வழக்குரையை படித்து உள்ளேனா என்றால் படித்து உள்ளேன். என் வழக்குரையில் பழைய கழிவறை இருந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் வழக்கு கழிவறை அமைக்கப்பட்டதாக கட்சி செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. முறையான சட்ட விதிமுறைகளை பின்பற்றி தான் வழக்கு கழிவறை அமைக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விதிமுறைகளை பின்பற்றவில்லை. எதிர் வழக்குரையில் பிரதிவாதிகள் என் சொத்திற்கு செல்லும் அளவிற்கு போதிய இடம் அளித்து தான் வழக்கு கழிவறை கட்டப்பட்டதாக கட்சி செய்துள்ள நிலையில் வழக்கு சொத்தை பார்வையிட்டு அளக்க நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி எம்மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் தீர்ப்பாகிய அ.வ.எண். 21/2018 வழக்குக்கும் இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கும் இவ்வழக்கு சொத்திற்கும் இவ்வழக்கு கழிவறைக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. இரண்டு வழக்கும் ஒரே வண்டி தடத்தில் நடந்த இரு வேறு ஆக்கிரமிப்பு தொடர்பானது. என் சொத்தில் பிரதிவாதிகளால் எவ்வித சட்டப்பூர்வ உரிமை ஏதும் மீறப்படவோ, சேதப்படவோ இல்லை என்றால் சரியல்ல. எனது வண்டித்தடம் பாதிக்கப்பட்டுள்ளது.

5) என் தரப்பு ஆவணங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி